# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.142/2025

**Deposition of Witness for Prosecution PW 25**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராணி | Husband's Name | : | முருகேசன் |
| Village | : | வடபாதிமங்கலம் | Taluk | : | வடபாதிமங்கலம் |
| Calling | : | | Age | : | 45 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 18th day of February 2026.**

**(A1 to A8 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போதும் வடபாதிமங்கலம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வடபாதிமங்கலம் காவல் நிலைய கு.எண் 14/2025 வழக்கு கோப்பினை எனது மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 09.02.2025 அன்று காலை 9.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ரவிச்சந்திரன், பாலு ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.18 15:53:01 +0530

செய்யப்பட்டுள்ளது. அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.25**. காலை 10.00 மணியளவில் மேற்படி 2 சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்திலிருந்து சா.பொ.5 முதல் சா.பொ.7 யை அ.சா.ஆ.3 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். சா.பொ.5 முதல் சா.பொ.7 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட படிவம் 91 **அ.சா.ஆ.26**. அன்றைய தினமே பகல் 11.00 மணி முதல் பகல் 12.00 மணி வரை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கு முன்பு சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் ரோபர்ட் (எ) சோமசுந்தரம் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.27**. மாலை சுமார் 5.00 மணிக்கு மன்னார்குடி ரோடு கோரையாறு பாலம் அருகே நின்று கொண்டிருந்த இவ்வழக்கின் 3ம் எதிரி சிவனேசனை குற்ற காரணம் கூறி கைது செய்து சாட்சிகள் குமார், மருதையன் ஆகியோர் முன்னிலையில் எதிரி சிவனேசன் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அதில் என்னை அழைத்து சென்றால் கொலை நடந்த இடத்தை அடையாளம் காட்டியும் நான் கொலைக்கு பயன்படுத்திய புனவாசல் அரசு பள்ளி அருகே சவுக்கு கட்டை மற்றும் மர ரீப்பரை தூக்கி போட்ட இடத்தை அடையாளம் காட்டி தங்களிடம் எடுத்து ஆஜர் செய்கிறேன் என்ற எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின்

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.18 15:53:08 +0530

அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.28**. அதனடிப்படையில் 18.30 மணிக்கு புனவாசல் அரசு மேல்நிலைப் பள்ளி அருகே சாட்சிகள் குமார், மருதையன் ஆகியோர் முன்னிலையில் எதிரி சிவனேசன் எடுத்து ஆஜர் செய்த சா.பொ.2, சா.பொ.3 யை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.29**. சா.பொ.2, சா.பொ.3 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட படிவம் 91 **அ.சா.ஆ.30**. 09.02.2025 அன்று சாட்சிகள் நாகையன், பாலு, பக்கிரிசாமி, ஜீவா, பிரசன்னா, குமார், மருதையன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 10.02.2025 அன்று எதிரிகள் கோபிநாத், திலீபன் சூர்யா, சின்ராஜ் (எ) வடிவழகன் ஆகியோரை பழையனூர் பேருந்து நிறுத்தம் அருகில் வைத்து குற்ற காரணம் கூறி கைது செய்தேன். 1ம் எதிரி கோபிநாத் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் சோமசுந்தரம், கலியமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். அதில் என்னை அழைத்து சென்றால் நான் ரோபர்டை கொலை செய்த சம்பவ இடத்தை அடையாளம் காட்டுவேன், நான் கொலை செய்த பிறகு நானும் என்னுடன் எனது தம்பி திலீபன் சூர்யா மற்றும் சின்ராஜ் (எ) வடிவழகன் ஆகியோர்கள் தப்பித்து செல்ல பயன்படுத்திய இப்ப நாங்க வந்த காரை சாட்சிகள் முன்னிலையில் தங்களிடம் ஆஜர் செய்கிறேன் என்ற ஒப்புதல்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.18 15:53:14 +0530

வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.31**. அதனடிப்படையில் 18.00 மணிக்கு பழையனூர் பேருந்து நிறுத்தம் அருகே சாட்சிகள் சோமசுந்தரம், கலியமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் 1ம் எதிரி கோபிநாத்திடமிருந்து TN 02 BJ 8106 என்ற பதிவெண் கொண்ட Ertiga காரை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.32**. மேற்படி கார் **சா.பொ.8**. சா.பொ.8 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட படிவம் 91 **அ.சா.ஆ.33**. 10.02.2025 அன்று கலியமூர்த்தி, ஜெயமுருகன், சோமசுந்தரம் ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 11.02.2025 அன்று 13.00 மணியளவில் மாயனூர் ஆண்டி குளத்தெரு எதிரியின் வீட்டில் வைத்து 6ம் எதிரி விக்னேஷை குற்ற காரணம் கூறி கைது செய்தேன். 6ம் எதிரி விக்னேஷ் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ராம்பிரசாத், பரமானந்தம் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். அதில் என்னை அழைத்து சென்றால் கொலை செய்த இடத்தை அடையாளம் காட்டியும் நான் ரோபர்டை அடிக்க பயன்படுத்திய எனது கூரை வீட்டில் பின்புறம் சொருகி மறைத்து வைத்திருக்கும் சவுக்கு கட்டையை எடுத்து தங்களிடம் ஆஜர் செய்கிறேன் என்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.34**. அதனடிப்படையில் 6ம் எதிரி விக்னேஷிடமிருந்து

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.18 15:53:21 +0530

எதிரியின் வீட்டின் பின்புறம் கூரையில் சொருகி மறைத்து வைத்திருந்த சா.பொ.1 யை அ.சா.ஆ.5 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். சா.பொ.1 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட படிவம் 91 **அ.சா.ஆ.35**. 11.02.2025 அன்று சாட்சிகள் சேதுராமன், விஜயராகவன், பரமானந்தம், சுரேஷ், ராம்பிரசாத் ஆகியோரை விசாரித்தும் வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 12.02.2025 அன்று 16.00 மணிக்கு மாயனூர் பேருந்து நிறுத்தம் அருகே எதிரி அப்பு (எ) புதியபாண்டியனிடமிருந்து சாட்சிகள் திருவேங்கடம், சசிகுமார் ஆகியோர் முன்னிலையில் சா.பொ.4 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.36**. 13.02.2025 அன்று சாட்சிகள் காளிதாஸ், செல்வம், ரவிச்சந்திரன் ஆகியோரை விசாரித்தும் 27.02.2025 அன்று Junior Scientific Officer ரமேஷை விசாரித்தும் வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 28.02.2025 அன்று டாக்டர் நவீனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். 03.03.2025 அன்று 2 ம் நிலை காவலர்கள் சுந்தர், வினித்ராஜ் 04.03.2025 அன்று தலைமை காவலர் ஆனந்தராஜ் 18.03.2025 அன்று உதவி ஆய்வாளர் சேகர் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 02.04.2025 அன்று இவ்வழக்கின் 9 ம் எதிரி சக்திதாஸ் குற்ற காரணம் தெரிந்தே கொலை சம்பவத்தில் ஈடுபட்ட மற்ற எதிரிகள் தப்பி

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.18 15:53:27 +0530

செல்ல உதவியாக தனக்கு சொந்தமான TN 02 BJ 8106 என்ற பதிவெண் கொண்ட Maruti Suzuki Ertiga காரை கொடுத்து உதவி செய்ததால் இவ்வழக்கின் சட்டப் பிரிவினை பாநிச பிரிவுகள் 191(2), 191(3), 103 லிருந்து பாநிச பிரிவுகள் 191(2), 191(3), 103, 3(5) ஆக சட்டப் பிரிவு மாறுதல் செய்து அறிக்கை சமர்ப்பித்தேன். அந்த சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.37**. RT No.1161 / 2025, TAN / BIOL / 130 / 2025, Dated 30.04.2025 - Report : Detected blood in each of the items 1, 2, 3 and 5 but not in item 4 என வரப்பெற்ற அறிக்கை **அ.சா.ஆ.38**. RT No.6192 / 2025, TAN / SER / 25 / 2025, Dated 26.06.2025 Item Nos.1 & 2 Human "A" Group - The result of grouping test is inconclusive எனவும் Item Nos.3 & 4 The result of grouping test is inconclusive எனவும் வரப்பெற்ற அறிக்கை **அ.சா.ஆ.39**. எனது புலன் விசாரணை முடித்து 02.04.2025 அன்று எதிரிகள் மீது பாநிச பிரிவுகள் பாநிச பிரிவுகள் 191(2), 191(3), 103, 3(5)ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் சாட்சிகள் காளிதாஸ், சேதுராமன், விஜயராகவன், கலியமூர்த்தி, சோமசுந்தரம், திருவேங்கடம், சசிகுமார், குமார், மருதையன் ஆகியோர் சம்பவம் பற்றி கூறியதையே நான் வாக்குமூலங்களாக பதிவு செய்துள்ளேன்.

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.18 15:53:32 +0530

**குறுக்கு விசாரணை**

முதல் தகவலறிக்கை 17 மணி நேரம் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு சென்றடைந்ததற்கு எந்த சிறப்பு காரணமும் இல்லையென்றால் சரி. முதல் தகவலறிக்கையில் புகார்தாரரின் கையொப்பம் பெறப்படவில்லை என்றால் சரி. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் உதவி ஆய்வாளர் புகார் எழுதி வாங்கி கொண்டார் அ.சா.1 தனது விசாரணையில் சொல்லவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் இரவு நேரம் என்ற சூழ்நிலையில் எந்த வெளிச்சத்தில் சாட்சிகள் நடந்ததாக சொல்லும் சம்பவத்தை பார்த்தார்கள் என்று எனது விசாரணையில் குறிப்பிடவில்லை. அ.சா.1 வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக எனது விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் சரி. அ.சா.2, அ.சா.4, அ.சா.5, அ.சா.10, அ.சா.11, அ.சா.12, அ.சா.13, அ.சா.15, அ.சா.16 ஆகிய சாட்சிகள் சொல்லாத சங்கதிகளை சொன்னதாக வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளேன் என்றால் தவறு. எதிரிகள் சொன்ன தேதி, நேரம், இடம், வித்தில் கைது செய்யப்படவில்லை எனவும் எதிரிகள் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை எனவும் வழக்கு சான்று பொருட்கள் எதுவும் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்படவில்லை எனவும் சொன்னால் தவறு. இறந்த ரோபர்ட் பல்வேறு குற்ற வழக்குகளில் சம்மந்தப்பட்டவர்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.18 15:53:37 +0530

எனவும் வேறு ஏதோ ஒரு வகையில் காயம்பட்டு இறந்த ரோபர்ட் வழக்கை முடிவுக்கு கொண்டுவர வேண்டி எதிரிகளை தொடர்புபடுத்தி வழக்க புனையப்பட்டுள்ளது எனவும் ரோபர்டின் இறப்பிற்கும் எதிரிகளுக்கும் எந்த தொடர்புமில்லை எனவும் சொன்னால் தவறு. சம்பவ இடம் செல்லாமலும் சாட்சிகளை விசாரிக்காமலும் எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.18 15:53:43 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.